# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

### Sessions Case No.19/2024

Deposition of witness for : PW-1

Name : சந்திரசேகர்

Father's / Husband Name : கோபி

Solemnly affirmed in accordance with the provisions of Law by Thiru.M.Senthilkumar, Superintendent of this court on the day of 19.01.2026 Evidence Recorded from 12.24 p.m. to 12.48 p.m.

**1 ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார், 4 ம் எதிரி ஆஜரில்லை – குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2, 3, 5 முதல் 8 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை தொடர்ச்சி:–**

என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து மட்டும் என்னுடையததுான். கையெழுத்து மட்டும் **அதசாஆ.1** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி குவிமுச 161 (3) ன் படியான வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க வேண்டினார். சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் போலிசார் விசாணையின் போது கடந்த 07.09.2023–ம் தேதி மாலை 06.30 மணியளவில் விமல் எனக்கு போன் செய்து ஜெயா தியேட்டர் அருகில் வரச்சொன்னார் என்றும், நானும் என்னுடைய இருசக்கர வாகன எண்.TN 54 E 7756 என்ற வாகனத்தில் சென்றேன் என்றும், அங்கு விமல் மற்றும் விக்னேஷ் இருந்தார்கள் என்றும், அங்கு விமல் இரண்டாயிரம் ரூபாய் நோட்டை கொடுத்து அதற்கு தங்கமாக வாங்கித்தரும்படி சொன்னார்கள் என்றும். அந்த வேலையை நான் செய்ய மாட்டேன் என்று சொன்னதாகவும். உடனே விமல் மற்றும் விக்னேஷ் அவர்களுடன் இருந்த அடையாளம் தெரிந்த பெயர் விலாசம் தெரியாத இரண்டு நபர்களும் சேர்ந்து கத்தியை வைத்துக் கொண்டு என்னை சுற்றி வளைத்து வாகனத்தில் உட்கார சொன்னார்கள் என்றும், நான் அப்போது சத்தம் போட்டேன் என்றும், அப்போது அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் வந்தார்கள் என்றும், அப்போது அவர்களிடம் கத்தியை காட்டி மிரட்டினார்கள் என்றும், பிறகு TN 54 E 5945 ஹோன்டா வாகனத்தில் அங்கிருந்த விமலும் அடையாளம் தெரிந்த பெயர் விலாசம் தெரியாத நபர்கள் என்னை கடத்தி கொண்டு குறிஞ்சி ஹவுசிங் போர்டு அருகே உள்ள ஓட்டு வீட்டிற்கு கொண்டு சென்றார்கள் என்றும், அங்கு விக்னேஷ் என்னிடமிருந்த அரை (½) பவுன் மோதிரம், பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.15,000/– எடுத்து கொண்டார் என்றும், பிறகு விக்னேஷ் என்னிடம் கத்தியை காட்டி இரண்டு லட்ச ரூபாய் கொடுத்தால் என்னை உயிரோடு விடுவதாக சொன்னார் என்றும், அவ்வளவு பணம் இல்லையென்று நான் சொன்னேன் என்றும், அதற்கு விக்னேஷ் அவர் வைத்திருந்த கத்தியால்

எனது இடது உள்ளங்கையில் கிழித்தார் என்றும், பிறகு விக்னேஷ் உடன் இருந்த விமல், பன்னி மாரியப்பன், மற்றும் ஐந்து நபர்கள் என்னை கையாலும் காலாலும் மாறி மாறி அடித்தார்கள் என்றும், அதனால் எனது உடல் முழுவதும கன்னிய காயம் ஏற்பட்டது என்றும், பிறகு வலி தாங்க முடியாமல் கேட்ட பணத்தை தருவதாக சொல்லி ஓவியா கடை ஓனர் சண்முகராஜன் அவர்களிடம் போன் செய்து உடனடியாக பணம் இரண்டு லட்ச ரூபாய் வேண்டும் என்று கேட்டேன் என்றும், அவர் பணம் இல்லையென்றும் கேசியரை பாருங்கள் என்று சொல்லிவிட்டார் என்றும், பிறகு அங்கிருந்தவர்களில் ஒரு நபரை ஓவியா நகைக்கடையில் சந்துரு சொல்லியதாக சொல்லி பணம் வாங்கி வரச்சொன்னேன் என்றும், அங்கு ஐம்பதாயிரம் மட்டும் கொடுத்தார்கள் என்றும், பிறகு மீதிப்பணத்தை கொடுத்தால் உன்னை உயிரோடு விட்டுவிடுவேன் என்று விக்னேஷ், விமல், பன்னி மாரியப்பன் மற்றும் நான்கு நபர்கள் சொன்னார்கள் என்றும், பிறகு அங்கிருந்து தப்பிக்க வேண்டி என்னுடைய வீட்டில் இருக்கும் நகைகளை எடுத்து அடகு வைத்தாவது பணத்தை கொடுத்து விடுகிறேன் என்று சொன்னேன் என்றும், பிறகு விக்னேஷம் அவருடன் இருந்தவர்களும் இரவு 09.30 மணியளவில் அப்சரா இறக்கம் வந்தவுடன் விக்னேஷ் உன்னுடைய வாகனத்தை கொடுத்தால் நீ திரும்ப வரமாட்டாய் என்று கூறி விமல் ஓட்டி வந்த இருசக்கர வாகனம் TN 54 E 5945 Honda activa வாகனத்தை கொடுத்து சீக்கிரம் பணம் ரெடி பண்ணி வா என்று சொன்னார் என்றும், இல்லையென்றால் வெட்டி கொன்றுவிடுவோம் என்று மிரட்டினார்கள் என்றும், பிறகு பணம் கொடுத்தாலும் என்னை கொன்று விடுவார்கள் என்று எண்ணி சூரமங்கலத்தில் உள்ள எனது

பெரியப்பா வீட்டிற்கு சென்று அவரிடம் சொன்னேன் என்றும், அதன்படி அவர் புகார் கொடுக்குமாறு சொன்னார் என்றும், 08.09.2023–ம் தேதி உடல்வலி அதிகமாக இருப்பதால் சேலம் அரசு மருததுவமனைக்கு சென்று சிகிச்சையில் சேர்ந்தேன் என்றும், அப்போது தகவல் தெரிந்து செவ்வாய்பேட்டை காவல் நிலையத்தில் இருந்து போலிசார்கள் வந்தார்கள் என்றும், அவர்களிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும், அது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள் என்றும் போலிஸ் விசாரணையின் போதும் பதிவு செய்யப்பட்ட குவிமுச பிரிவு 161(3)–ன் படியான வாக்குமூலத்திலும் கண்டுள்ளவாறு சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் கண்டுள்ள (சிடியுடன்) TN 54 W 7756 என்ற இருசக்கர வாகனம் என்னுடையதுதான். அது **சாபொ.1** ஆகும். மேற்படி புகைப்படத்தில் கண்டுள்ள தொகை ரூ.15,000/– (200 மற்றும் 500 ரூபாய் நோட்டுகள்) எனக்கு சொந்தமானதுதான். அது **சாபொ.2** ஆகும். மேற்படி புகைப்படத்தில் கண்டுள்ள அரை (½) பவுன் தங்க மோதிரம் எனக்கு சொந்தமானதுதான். மேற்படி சொத்துக்களை சேலம், நீதித்துறை நடுவர் எண்.3 அவர்களிடமிருந்து மனு தாக்கல் செய்து இடைக்கால பாதுகாவலில் பெற்று சென்றுள்ளேன். அது **சாபொ.3** ஆகும்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) –** அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென்று எடுத்துரைக்கப்பட்டது.

ஒம்/– S. எழில் வேலவன்
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
------------
## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

## Sessions Case No.19/2024

| | |
|---|---|
| Deposition of witness for | : PW-2 |
| Name | : நீலகண்டன் |
| Father's / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Law by Thiru.M.Senthilkumar, Superintendent of this court on the day of 19.01.2026 Evidence Recorded from 12.50 p.m. to 12.55 p.m.

**1 ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார், 4 ம் எதிரி ஆஜரில்லை – குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2, 3, 5 முதல் 8 எதிரிகள் ஆஜர்.**

நான் ஏடிசி டிப்போ பின்புறம் கிச்சிபாளையம் சேலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஓவியா ஜுவல்லர்ஸ்ல் காவலாளியாக வேலை செய்து வருகிறேன். அசா.1 யை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி குவிமுச 161 (3) ன் படியான வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க வேண்டினார். சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் போலிஸ் விசாரணையில் கடந்த 07.09.2023 ம் தேதி மாலை 06.30 மணியளவில் ஜெயா தியேட்டர் அருகில் நான் சென்றுகொண்டிருந்த போது எங்கள் நகை கடையில் வேலை செய்யும் சந்திரசேகர் என்பவர் TN 54 E 7756 என்ற வாகனத்தில் வந்தவரை விமல்குமார், விக்னேஷ், மாதவன், இளையராஜா, ஆளுக்கொரு கத்தியை வைத்துக்கொண்டு சந்திரசேகரை சுற்றி வளைத்துக்கொண்டு எங்கையும் போக விடாமல் வண்டியில் உட்கார வைத்து சென்றார்கள் என்றும், அப்போது சந்திரசேகர் சத்தம் போட்டார் என்றும், அப்போது அக்கம்பக்கத்தில் உள்ள நானும் மற்ற நபர்களும் போனபோது எங்களிடம் கத்தியை காட்டி மிரட்டினார்கள் என்றும், பிறகு நாங்கள் பயந்துகொண்டு அங்கிருந்து ஓடிவிட்டோம் என்றும், பிறகு சந்திரசேகரை TN 54 E 7756 என்ற வண்டியில் விக்னேஷ் ஓட்ட சந்திரசேகரை பின்னால் உட்கார வைத்து மாதவன் பிடித்து கொண்டு வேகமாக அங்கிருந்து சென்றுவிட்டார்கள் என்றும் நான் சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) –** அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென்று எடுத்துரைக்கப்பட்டது.

**மறுவிசாரணை.** இல்லை.

ஒம்/– S. எழில் வேலவன்,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.